# ஆசியுரை

அன்பின் வாசக நெஞ்சங்களே!

கார்த்திகை மாதத்தில் இறந்தோரை நினைவுகூர்ந்து அவர்களுக்காக மன்றாடுவதும், அவர்களளின் ஆன்ம ஈடேற்றத்திற்காக திருப்பலி ஒப்புக்கொடுப்பதும் எமது கத்தோலிக்க விசுவாச செயற்பாடுகள். இறந்தவர்கள் துயில் கொள்ளும் கல்லறைகளை தரிசித்து அவர்கள் உயர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கையில் நாம் வாழ்வதும் எமது அடிப்படையான விசுவாசமாகிறது. குறிப்பாக எமது தாயகத்தில் போரினாலே இறந்து போனவர்கள், இயற்கையின் அழிவினால் அழிந்து போனவர்கள் மிகவும் அதிகமாக உள்ளார்கள். இவர்கள் எமக்கு நெருங்கிய உறவினர்களாகவும், நண்பர்களாகவும் இருக்கிறார்கள். எத்தனையோ இளம் உள்ளங்கள் தங்கள் நாட்டின் விடுதலைக்காக தங்களின் உயிரை துர்ச்சமாக எண்ணி தியாகம் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் ஒவ்வொருவரும் சிறப்பான முறையில் அறிந்திருக்கிறோம்.

### ஏன் நாம் இறந்தவர்களை நினைவு கூருகிறோம்?

எமது கத்தோலிக்க விசுவாசத்தின் அடிப்படையில் இவர்கள் இயேசுவின் உயிப்பில் பங்கு கொள்கிறார்கள். எமது அடிப்படையான விசுவாசம் உயிர்த்தெழுதலில்தான் கட்டப்பட்டுள்ளது. எமக்கு கட்டாயம் உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கையை வளர்கிறது. எமக்கு முன்பு இறந்து போனவர்கள் எப்பொழுதும் இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு கொள்கிறார்கள். இவர்களுடைய நன்மைத்தனங்கள் என்றுமே நாம் மறக்கக் கூடாது. இவர்கள் நம் பெற்றோர்களாக இருக்கலாம், சகோதரர்களாக இருக்கலாம், பிள்ளைகளாக, நண்பர்களாக, உற்றார் உறவினர்களாக இருக்கலாம். இவர்கள் எமக்கு வேண்டியவர்கள். இவர்களை நாங்கள் நினைவு கூர வேண்டிய கடமை எமக்குண்டு என்பதை நாம் உணர வேண்டும்.

### இறந்த விசுவாசிகளின் கல்லறைகளை ஏன் நாம் தரிசிக்க வேண்டும்?

கல்லறை என்பது உயிர்ப்பின் அடையாளமாக இருக்கிறது. ஒரு நாளைக்கு இவரும் உயிர்த் தெழுவார் என்ற நம்பிக்கையை எமக்கு உணர்த்துகிறது. இறந்து போனவர்களின் இழப்பை ஈடுசெய்ய முடியாது. இது ஒரு ஆத்ம திருப்திக்காக நாம் செய்யும் செயல்பாடாகவும் இருக்கிறது. எமது உள்ளத்தின் கிடக்கைகளை வெளிக்கொணரும் போது எமது கவலையான மனம் விடுதலை அடைகிறது. உள்ளம் ஆறுதல் அடைகிறதை நாம் உணர முடிகிறது. இக்கார்த்திகை மாதம் மிகவும் முக்கியமானதாக இறந்த விசுவாசிகளுக்கு திருச்சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாதத்தில் இறந்து போனவர்களை நினைவுபடுத்தி நினைவூட்டம் செய்யவும் மன்றாடவும் அழைக்கப்பட்டுள்ளோம்

நன்றி

**அருட்பணி யூட் நிக்ஸன்**

**Parish Priest , Our Lady of Deliverance Tamil Catholic Mission**